07.06.2025

## 'பல்' பிடுங்கிய விவகாரம்: பல்வீர் சிங் நேரில் ஆஜர்... நீதிமன்றம் முக்கிய உத்தரவு! - CUSTODIAL TORTURE CASE

*சம்பவம் தொடர்பாக விசாரித்த காவல் அதிகாரிகள் பல்வீர் சிங் மற்றும் அவருடன் பணியாற்றிய 14 காவலர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.*



**நெல்லை**: கைதிகளின் பற்களை கொடூரமாக பிடுங்கிய வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐபிஎஸ் அதிகாரி பல்வீர் சிங் நெல்லை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகினார்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம் ஆகிய காவல் நிலையங்களில் கடந்த 2023 ஆம் ஆண்டு குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களை அப்போதை உதவிய காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங், கட்டிங் பிளேயர் மற்றும் ஜல்லிக் கற்களைப் பயன்படுத்தி பற்களை கொடூரமாக பிடுங்கி சித்திரவதை செய்ததாகப் புகார்கள் வெளிவந்தன. குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்கள் வாயில் ஜல்லிக் கற்களைப் போட்டு லத்தியால் அடித்ததாகவும், கட்டிங் பிளேயரால் பற்களைப் பிடுங்கியதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் புகார் தெரிவித்தனர.

இந்த விவகாரம சர்ச்சையான நிலையில், அப்போதைய நெல்லை மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் உத்தரவின்படி, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் முகமது சபீர் ஆலம் விசாரணை நடத்தினார். இச்சம்பவம் தொடர்பாக மேற்கண்ட காவல் நிலையங்களில்

வழக்கு பதியப்பட்டது. இதையடுத்து, 2023 மார்ச் 29 அன்று பல்வீர் சிங் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் பரிந்துரையின் பேரில், மூத்த ஐஏஎஸ் அதிகாரி அமுதா இந்த விவகாரம் குறித்து உயர்மட்ட விசாரணை நடத்த நியமிக்கப்பட்டார். அவர் 80-க்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கு பின்னர் சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. சிபிசிஐடி ஆய்வாளர் உலக ராணி மற்றும் ஏடிஎஸ்பி சங்கர் ஆகியோர் விசாரணை மேற்கொண்டு, பல்வீர் சிங் மற்றும் அவருடன் பணியாற்றிய 14 காவலர்கள் மீது (சம்பவத்தில் ஈடுபட்டவர்கள்) குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

பாதிக்கப்பட்ட வேத நாராயணன், சூர்யா, வெங்கடேசன் மற்றும் அருண்குமார் ஆகியோரின் புகார்களின் அடிப்படையில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன. இதற்கிடையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பல்வீர் சிங், கடந்த 2023 டிசம்பரில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார். அவர் மீதான வழக்கு நெல்லை மாவட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

தமிழ்நாட்டை உலுக்கிய இந்த வழக்கு இன்று மீண்டும் குற்றவியல் நீதித்துறை நடுவர் சத்யா முன் விசாரணைக்கு வந்தது. குற்றம் சாட்டப்பட்ட ஐபிஎஸ் அதிகாரி பல்வீர்சிங் இன்று நடைபெற்ற விசாரணையில் நேரில் ஆஜராகினார். அப்போது இந்த விவகாரம் முழுவதும் மனித உரிமை மீறல் என்பது தெளிவாகிறது. ஆகவே, இதனை மாவட்ட நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்து கொள்ள வேண்டும் என்று பாதிக்கபட்ட நபர்களின் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கோரிக்கை வைத்த நிலையில், அதனை நீதிபதி ஏற்று கொண்டார்.

இது குறித்து பாதிக்கப்பட்டவர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மாடசாமி அளித்த பேட்டியில், "இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் தரப்பில் குற்றம் நிரூபிக்கப்பட்டது மட்டுமல்லாமல் மிகப்பெரிய மனித உரிமை மீறல் நடந்துள்ளது. எனவே, இந்த வழக்கை மாவட்ட நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்த நிலையில் நீதிபதி அதனை ஏற்றுக் கொண்டார். மேலும் இந்த வழக்கில் விசாரணை நியாயமாக நடைபெறும் என்று நம்புகிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

https://www.etvbharat.com/ta/!state/custodial-torture-case-ips-officer-balveer-singh-appears-in-court-tamil-nadu-news-tns25060609524